



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் அவ்வல் பிறை 3 ஹிஜ்ரி 1437<br>Friday of Jumathiyul Awwal 3rd Hijri 1437<br>12th February 2016 |

| | |
|---|---|
| **தலைப்பு:** | **ஆலோசனையும் தேசிய சபையும்!** |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |

| |
|---|
| *இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.* |

| தலைப்பு: | ஆலோசனையும் தேசிய சபையும்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். ஆலோசனைகள் செய்து நடக்க வேண்டும் என்று தன்னுடைய தெளிவான வேதத்தின் மூலம் வலியுறுத்துகிறான். அவ்வாறே நடந்து கொள்ளுமாறு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அறிவுரை கூறுகிறார்கள். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(9:119)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ

“நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள் மேலும், (சொல்லிலும் செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்”

முஸ்லிம்களே! நீதமான நமது ஷரீஅத் வலியுறுத்தி கூறிய மிக முக்கியமான நாகரீக வழிமுறைகளில் ஒன்றுதான் ஆலோசனை செய்யும் பழக்கம். நமது மார்க்கம் ஆலோசனை செய்வற்கு மிகப் பெரிய முன்னுரிமையை வழங்கியுள்ளது. ஆலோசனை செய்வதின் முக்கியத்துவத்தையும், மகத்துவத்தையும், மதிநுட்பத்தையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த பழக்கத்தை தொழுகையோடு இணைத்து தன்னுடைய வேதத்தில் இறைவன் கூறுகிறான்: (42:38)

وَالَّذِينَ اسْتَجَابُوا لِرَبِّهِمْ وَأَقَامُوا الصَّلَاةَ وَأَمْرُهُمْ شُورَى بَيْنَهُمْ وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ

“தவிர, அவர்கள் தங்கள் இறைவனின் கட்டளைகளை அங்கீகரித்துத் தொழுகையையும் நிலைநிறுத்துவார்கள். அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் தங்களுக்குள் ஆலோசனைக்குக் கொண்டு வருவார்கள். நாம் அவர்களுக்கு அளித்தவைகளிலிருந்து தானமும் செய்வார்கள்”

மேல்கூறிய இந்த வசனத்திற்கு பின்வருமாறு உலமாக்கள் விளக்கம் தருகிறார்கள்: நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சஹாபாக்கள் ஒரே வார்த்தையின் கீழ் ஒற்றுமையாக இருப்பதை இறைவன் இந்த வசனத்தில் புகழ்ந்து கூறுகிறான். மேலும் அவர்கள் தங்களுடைய செயல்திட்டங்களை ஆலோசனை செய்து, இறுதி செய்யப்பட்ட முடிவை அனைவரும் நடைமுறைப்படுத்தினார்கள். ((36/16) : تفسير القرطبي)

தன்னுடைய நபி முஹம்மது ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்முடைய சஹாபாக்களோடு ஆலோசனை செய்து கொள்ள வேண்டும் என்று இறைவன் அறிவுறுத்துகிறான். காரணம் ஆலோசனை செய்வதில் பெரும் நன்மை விளையும். சிறப்பான அணுமுறையை உருவாக்க முடியும். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (3:159)

وَشَاوِرْهُمْ فِي الأَمْرِ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللَّهِ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُتَوَكِّلِينَ

“(நபியே! யுத்தம், சமாதானம் ஆகிய) மற்ற காரியங்களிலும் அவர்களுடன் கலந்து ஆலோசித்தே வாருங்கள்! (யாதொரு விஷயத்தை செய்ய) நீங்கள் முடிவு செய்தால் அல்லாஹ்விடமே பொறுப்பை ஒப்படையுங்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் (தன்னிடம்) பொறுப்பு சாட்டுபவர்களை நேசிக்கின்றான்”

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாழ்வில் ஆலோசனை செய்யும் இந்த பண்பு மிகப்பெரிய முக்கியத்துவத்தையும் மதிப்பையும் பெற்று இருந்தது. ஒவ்வொரு செயல் திட்டங்களை உருவாக்குவதற்கு முன்னர் தன்னுடைய சஹாபாக்களை பார்த்து நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கோரிக்கை வைப்பார்கள்:

يَا أَيُّهَا النَّاسُ، أَشِيرُوا عَلَيَّ

“மனிதர்களே என்னோடு ஆலோசனை செய்யுங்கள்” (البخاري : 4757 ومسلم : 1333 و 2770)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காட்டிலும் வேறு எந்த மனிதரும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் தன்னுடைய தோழர்களிடம் ஆலோசனை செய்ததை நான் கண்டதில்லை என்று அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (الترمذي : 288)

தொழுகையாளிகளே! பல்வேறு இடங்களிலும் காலகட்டங்களிலும் இவ்வாறு ஆலோசனை செய்யும் பண்பை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ உரையின் போது மக்கள் முன்னிலையில் பேசுவதற்கு மிம்பர் மேடையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று சஹாபாக்களிடம் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது பேரீச்ச மரக்கட்டையை

மேடையாக அமைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை தரப்பட்டது. அதன்படியே அந்த ஜும்ஆ மேடையை அமைத்துக் கொண்டார்கள். (5253 : مصنف عبد الرزاق)

ஒவ்வொரு தொழுகைக்கான நேரம் வந்தவுடன் மக்களுக்கு நினைவூட்டி அவர்களை தொழுகைக்கு அழைக்கும் முறையைப் பற்றி தன்னுடைய சஹாபாக்களிடம் ஆலோசனை நடத்தினார்கள். அந்த ஆலோசனையின் முடிவில் தற்போதைய நடைமுறை பாங்கொலி செயல்வடிவம் பெற்றது. பிறகு ஹஜ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து முதன்முதலாக பாங்கு சொல்ல உத்தரவிட்டார்கள். (ابن ماجه : 707 ، وأصله في الصحيحين)

நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெண்களிடமும் ஆலோசனை செய்யும் பண்பை கற்றுக் கொடுத்துள்ளார்கள். பெண்களின் அறிவார்ந்த சிந்தனைகளையும் தயவு கூர்ந்து கவனிக்க வேண்டும். ஹுதைபிய்யா ஒப்பந்தத்தின் போது முஃமீன்களின் அன்னை உம்மு ஸலமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்போது அந்த அம்மையார் மிகச் சிறந்த தெளிவான முடிவை கூறினார்கள்.

ஆம்! பெண்களிடமும் ஆலோசனை செய்ய வேண்டும், அவர்களின் சிந்தனைக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்பதற்கு இந்த நிகழ்வு ஆதாரமாக இருக்கிறது. எனவே ஆலோசனை செய்து சிறந்த தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும் என்கிற வழிமுறையை நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு காட்டித் தந்துள்ளார்கள். ஆலோசனை செய்வதின் மூலம் எண்ணற்ற பல நன்மைகளும், நற்பாக்கியங்களும் கிடைக்கும். வெற்றி இலக்கை அடைவதற்கான நேர்மையான அணுகுமுறையை இந்த பண்பாடு கற்றுக் கொடுக்கும். இதனால்தான் பல தலைவர்கள், ஆட்சியாளர்கள் தங்கள் அவையோரிடம் ஆலோசனை செய்து தமது குடிமக்களை காத்து வந்துள்ளார்கள். சிறந்த முடிவுகளை எடுத்து, அவற்றை செயல்படுத்தும் எளிமையான செயல்திட்டங்களை இத்தகைய ஆலோசனையின் மூலம் பெற்றார்கள்.

மர்வான் இப்னுல் ஹகம் தன்னுடைய மகன் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு பின்வருமாறு உபதேசித்துள்ளார்கள்: ஆலோசனை செய்யும் பழக்கத்தை நீ கைவிட்டுவிடாதே, ஏனெனில் அவ்வாறு ஆலோசனை செய்வது அவசியம் இல்லை என்று யாரேனும் கருதினால், நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் முதன் முதலில் இது அவசியம் இல்லை என்று கருதியிருப்பார்கள். (255/1 الجامع لابن وهب)

அல்லாஹ்வின் அடியார்களே! ஆலோசனை செய்வதின் மூலம் உயரிய இலக்குகளை அடையலாம், எண்ணற்ற பயன்கள் கிடைக்கும், இறைவனின் கட்டளைகளை பின்பற்றிய திருப்தியை பெறலாம், நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கும், மிகச் சிறந்த ஆய்வுகளையும், அசாதாரண அறிவுத்திறனையும் பெற முடியும், தொலைநோக்குடைய ஆழமான தீர்வுகளை வெளிப்படுத்த முடியும், தவறுகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும், சிறந்த முன்னுதாரணங்களை முன்னோடியாக கொள்ள முடியும்.

பஷார் பின் பர்த் என்கிற அறிஞர் கூறுகிறார், “எந்த பொதுக் காரியத்திலும் நான் தவறிழைத்ததில்லை, ஏதாவது ஒரு காரியம் எனக்கு மிக கடினமாகவும் சிக்கலாகவும் இருந்தால் அதனைப்பற்றி என்னுடைய குழுவில் ஆலோசனை செய்வேன், அவர்களின் ஆலோசனைப்படி செயல்படுவேன். ஒருக்கால் ஏதேனும் ஒரு பாதிப்பு ஏற்பட்டால் அதனால் பாதிப்படைந்தது அவர்களே” ((37/16) : تفسير القرطبي)

பொதுவாக ஆலோசனை செய்வதின் மூலம் ஓர் ஆட்சியாளருக்கும், அவரின் குடிமக்களுக்கும் சிறந்த புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் மனநிலையும் உருவாகும். தனக்கான சுயநல பார்வையை ஒழித்துவிட்டு மொத்த சமூகத்திற்கும், தேசத்திற்கும் பலனளிக்கும் வகையில் அற்பணிப்பு உணர்வோடு சேவை செய்யும் உந்துதல் சக்தியை இவ்வாறான ஆலோசனையின் மூலம் பெறமுடியும்.

இப்னுல் அரபி அல்மாலிகி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: ஆலோசனையின் மூலம் ஒரு சமூதாயம் இணக்கமாக இருக்கும், அறிவார்ந்த சிந்தனைகள் செயல்வடிவம் பெறும், நேர்மறையான அணுகுமுறைக்கு வழிவகுக்கும், ஆலோசனை செய்து பிறகு செயல்படும் எந்த கூட்டமும் நிச்சயம் நேரான பாதையை அடைந்து கொள்ளும்” ( : تفسير القرطبي (36/16))

ஒவ்வொரு காலத்திலும் அறிவார்ந்த மக்களும், சிந்தனை திறன் கொண்ட ஞானிகளும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களிடம் உள்ள ஆக்கப்பூர்வமான முடிவுகளை ஆலோசனையின் மூலமே பெற முடியும், ஒவ்வொரு உள்ளங்களையும் இணைக்கும் ஆற்றல் இந்த ஆலோசனைக்கு இருக்கிறது, இதயங்கள் யாவும் இணைந்து வாழும் இணக்கம் ஏற்படும், ஒற்றுமை, பரந்த மனநிலை, அன்பான அணுகுமுறை, ஒருவருக்கொருவர் உதவி செய்வது, அக்கறையோடு செயல்படுவது, போன்ற அனைத்திற்கும் இந்த ஆலோசனை வழிவகுக்கும். ஆழமான ஆய்வுகள் மூலம் திருத்தமாக செயல்பட முடியும், முன்செய்த தவறுகளை களைய முடியும், மிகச் சரியான மற்றும் எளிமையான வழிமுறைகளை துல்லியமாக தேர்வு செய்ய முடியும், ஆக ஆலோசனைகள் என்பது ALL யோசனைகளை பெறும் வழியாகும். எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அனைவரும் ஏக மனதாக செயல்பட்டு எந்த தடுமாற்றமும், மனமாற்றமும் இல்லாமல் இலக்கை மிக துரிதமாக அடைந்துவிட முடியும்.

ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: மனிதர்கள் மூன்று வகை, அவர்களில் ஒருவர் தான் ஏதேனும் ஒரு முயற்சியில் இறங்க வேண்டும் என்றால் உடனடியாக அறிவார்ந்த பெரியவர்கள் மற்றும் அனுபவம் உள்ளவர்களை நோக்கி செல்வார். பிறகு அவர்களிடம் ஆலோசனைகளை பெற்று அதன்படி செயல்படுவார் ( - 310/4 : انظر: مصنف ابن أبي شيبة 311)

தொழுகையாளிகளே! ஆலோசனை செய்வதற்கென்று ஒரு தனிப்பட்ட வழிமுறையை இஸ்லாம் விதிக்கவில்லை, அந்த பொறுப்பை அந்தந்த குழு மற்றும் சமூகத்திடம் ஒப்படைத்துள்ளது. அனைவரின் ஒப்புதலோடு அந்த குழுதான் அதற்கான வரைமுறைகளையும், நியதிகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஏக இறைவன் அல்லாஹ் தன்னுடைய மாபெரும் கருணையினால் மிகச் சிறந்த தலைமையை நமக்கு தந்துள்ளான். தங்கள் இதயங்களையும்,



www.sunnathwaljamath.com

வாசல் கதவுகளையும் நமக்காக திறந்தே வைத்துள்ளார்கள். தன்னுடைய குடிமக்களின் கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் மிகவும் அக்கறையோடு உள்வாங்கிக் கொள்கிறார்கள். ஆதரித்து அரவணைத்துச் செல்லும் பெற்றோர்களின் மனநிலையில் நம்முடைய ஆலோசனைகளை அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். ஆலோசனை செய்வது அவர்களின் ஒரு பண்பாகவும், கோட்பாடாகவும் இருக்கிறது. குடிமக்களுக்கு பயன்தரும் பணிகளை மிகவும் வலுவாக கட்டமைத்துள்ளார்கள். அவர்களின் கோரிக்கைகளை தயவு கூர்ந்து கவனத்தில் கொள்கிறார்கள். மாண்புமிகு ஷைக் ஜாயித் (அல்லாஹ் அவர்களின் ஒதுங்குமிடத்தை மேன்மைப்படுத்துவானாக) அவர்கள் இந்த ஐக்கிய அரபு அமீரக தேசத்தை ஒருங்கிணைத்து கட்டமைத்த நாளில் இருந்து, இந்த தேசம் தம் சகோதர ஆட்சியாளர்களுடன் நட்புணர்வோடும் ஒற்றுமையுணர்வோடும் இருக்கிறது.

எனவேதான் தேசிய ஆலோசனை மையத்தை உருவாக்கியுள்ளது. பல்வேறு வகையான அரசுசார் திட்டங்கள், செயல்பாடுகள் யாவும் இந்த துரையின் கீழ் ஆலோசிக்கப்படும். அரசுசார் புள்ளியல் தகவல்களும், கருத்துக் கணிப்புகளும் கவனத்தில் கொள்ளப்படும். பல்வேறு வகையான ஒவ்வொரு குடிமகனின் நலனில் அக்கறை செலுத்துகிறது, எனவே இந்த மையத்தின் வாசல் கதவு ஒவ்வொரு குடிமகனுக்காகவும் திறந்தே இருக்கிறது. அந்த ஆலோசனையில் உள்ள அறிவார்ந்த மற்றும் பொதுநலன் சார்ந்த கூறுகளை பகுப்பாய்வு செய்து ஆக்கப்பூர்வமான முடிவுகளை இந்த அரசிற்கு இந்த மையம் பரிந்துரைக்கும். அமீரக சமூகத்தை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மையம் என்றும் உயிர்ப்போடு இருக்கிறது.

இந்த தேசிய ஆலோசனை மையம் தொலைநோக்குச் சிந்தனையுடன் பல சீர்திருத்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. குடிமக்களுக்கு பலன் தரும் ஒவ்வொரு சேவையையும் இந்த மையம் மிக பரவலாக செய்து வருகிறது. அதாவது கல்வி, சுகாதாரம், சமூக கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வகையில் சேவை செய்கிறது. குடிமக்களின் வாழ்வு ஏற்றம் பெற வேண்டும், சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இந்த சபை அரசிற்கும் உதவியாக இருக்கிறது, மேலும் பல ஒத்துழைப்புகளையும் தருகிறது.

யா அல்லாஹ்! எங்கள் ஆட்சியாளர்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையான காரியங்களுக்கும் நீ கூலி வழங்குவாயாக!! மிகச் சிறந்த அமல்களை செய்யும் பாக்கியத்தை நீ எங்களுக்கு தருவாயாக நாங்கள் பேசும் வார்த்தைகளை அழகாக்குவாயாக எங்கள் முடிவை மிகவும் நல்ல முடிவாக வைப்பாயாக, தொடர்ந்து நேர்மையாக நடக்கும் மன உறுதியை எங்களுக்கு தருவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது. தொழுகையாளிகளே! நமது தனிப்பட்ட வாழ்விலும், பொதுவாழ்விலும் ஆலோசனை செய்யும் வழிமுறையை நாம் கடைபிடிக்க வேண்டும். நம்முடைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை குடும்பத்தினரோடு ஆலோசனை செய்ய வேண்டும், அப்போது அவர்களுக்கிடையில் பாசமும் நேசமும் வளரும். ஒருவருக்கொருவர் உதவும் மனநிலையும், விட்டுக்கொடுக்கும் தன்மையும்,

அக்கறையும் அதிகப்படும். பலதரப்பட்ட அனுபவங்கள் கிடைக்கும், சமயோசிதமான முடிவுகளை உடனுக்குடன் எடுக்க முடியும்.

ஆலோசனை பெறுவதின் மூலம் மூத்த குடிமக்களின் அனுபவங்களையும், தொலைநோக்கு சிந்தனைகளையும் இளம் தலைமுறையினர் பெற முடியும். ஆழமாகவும், பரந்தமனப்பான்மையோடு செயல்திட்டங்களை வடிவமைக்க முடியும். ஆலோசனை செய்வதினால் அர்த்தமுள்ள கருத்து பரிமாற்றமும், ஆரோக்கியமான விமர்சனங்களும் பெறலாம்.

ஓர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெறும் போது அதன் மூலம் ஊழியர்களிடையே உள்ள கருத்து வேற்றுமைகளை களையலாம், நெளிவு சுளிவுகளை நீக்கலாம், விமர்சனங்களுக்கு விளக்கம் தரலாம், மனக்கசப்புகளை வெளிக்கொணர்ந்து தீர்வுகள் பெறலாம், அடுத்தகட்ட வளர்ச்சிக்கான யோசனைகளையும் பெறலாம், நிறுவனத்தில் உள்ள மறைமுக குறைகளை கண்டறிந்து அதனை நீக்குவதற்கான வழிகளையும் ஊழியர்களிடம் அறிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட கலந்துரையாடல் மூலம் ஓர் அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் ஒரே நேர்கோட்டில் பயணிக்க முடியும். நிறுவனத்தின் செயல்பாடுகள் அனைத்தும் ஒரே அச்சில் மையம்கொண்டு மிகச் சீராக இயங்கும்.

இமாம் ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: அவ்வப்போது ஆலோசனை செய்யும் எந்த ஒரு குழுவும், இயக்கமும் நிச்சயமாக சீரான மற்றும் நேரான பாதையை அடைந்து கொள்வார்கள்.(10/9 : مصنف ابن أبي شيبة )

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )



www.sunnathwaljamath.com

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹூஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com